[1993 பிப்ரவரி 12

சென்னை பெரியார் நகர் எதிரிலிலுள்ள காலி மைதானத்தில் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் மூலம் வியாபார வளாகம் கட்டி வாடகைக்கு விடல்.

* 11854 திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[அ] சென்னை பெரியார் நகர் எதிரில் உள்ள காலி மைதானத்தில் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் மூலமாக வியாபார வளாகம் [Shopping Complex] கட்டி வாடகைக்கு விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம், செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

(அ) தற்போதைக்கு இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

80—

அத்தியூத்து கிராமத்திலுள்ள அரசு அட்டை அலகு தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள்.

* 10859—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு : மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியத்திலுள்ள அத்தியூத்து கிராமத்தில் அமைந்துள்ள அரசு அட்டை அலகு தொழிற்சாலையில் நிரந்தரமாக்கப்படாத தொழிலாளர் வேலையை நிரந்தரமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) அத்தியூத்து கிராமத்தில் அமைந்துள்ள அட்டை அலகு தொழிற்சாலை தமிழ்நாடு கதர் வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. அத்தியூத்து அலகில் உற்பத்தி செய்யப்படும் பேப்பர் வகைகளை எளிதில் விற்பனை செய்வதில் மிக சிரமமான நிலை உள்ளதாலும் கதர் வாரியத்தின் நிதி நிலைமை சரியில்லாத காரணத்தாலும் அத்தியூத்து அலகில் வேலை செய்து வரும் தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்திடும் எண்ணம் தற்போது வாரியத்திற்கு இல்லை.

(ஆ) எழவில்லை.